***கவனிக்க.*** *- 2022.07.01 ஆந் திகதிய 2287 ஆம் இலக்க வரத்தமானியின் பகுதி* II *(தமிழ் மொழி மூலம்) மற்றும் பகுதி* III, IV*(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2288 2022 ජූලි මස 08 වැනි සිකුරාදා 2022.07.08

*2288 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 962 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.*** *-* (i) *சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு சட்டமூலம் 2022, யூன் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2022, யூன் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(iii) *கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூன் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2022, யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1011 - B82362 - 5,403(2022/07)

# துணை விதிகள்

## இம்புல்பே பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 122 ஆவது பிரிவில் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இம்புல்பே பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டதும் 2020.06.11 ஆந் திகதி இடம்பெற்ற பொதுச் சபை கூட்ட தீர்மான இலக்கம் 05 (i) முன்மொழிவின் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கும் கீழுள்ள உப விதி 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை ( இடைநேர் விளைவான ஏற்பாடுகள் ) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்கூறிய பிரதேச சபை சட்டத்தின் 123 (1) ஆம் பிரிவிற்கமைய சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளுநராகிய கௌரவ டிகிரி பண்டா கொப்பேகடுவ ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டதெனவும், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து இவ் உப விதி இம்புல்பே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமுலாகுமெனவும், இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**டிகிரி பண்டா கொப்பேகடுவ,**
*ஆளுநர்,*
*சப்பிரகமுவ மாகாண சபை.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*2022, ஏப்பிறல் 25.*

### இம்புல்பே பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவிப்புகள் பற்றிய துணைச் சட்டம்

01. இம்புல்பே பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் காட்சிப்படுத்தப்படும் அனைத்து விளம்பர அறிவித்தல்களையும் பொது மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிக்கப்படாத வகையில் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப முறையாக ஒழுங்கு முறைப்படுத்தலும் மற்றும் கட்டுப்படுத்தலும் இத் துணைச் சட்டத்தின் நோக்கமாகும்.

02. இத் துணைச் சட்டமானது இம்புல்பே பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல்களை கட்டுப்படுத்தல் மற்றும் முறைப்படுத்தல் பற்றிய துணைச்சட்டம் என அறிமுகப்படுத்தப்படுகின்றது.

03. (1) எவரேனுமொரு நபரினால் இம்புல்பே பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் ( இதன் பின் அதிகார பிரதேசமென அறிமுகப்படுத்தப்படும் ) எந்தவொரு வளாகத்தில் பிரதேச சபை தலைவரினால் அதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இருந்தாலன்றி விளம்பர அறிவித்தலொன்றை நடாத்திச் செல்லக் கூடாது.

(2) இத்துணைச் சட்டத்தின் கீழான அனுமதி பத்திரமொன்றுக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும் இங்கு முதலாவது உப அட்டவணைக்கேற்ப தயாரிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் ஊடாக அனுமதிப்பத்திரமொன்றுக்காக விண்ணப்பிக்க வேண்டும்.

(3) இத் துணைச் சட்டத்தின் கீழான அனுமதிப்பத்திரமொன்றுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணமானது சபையினால் இதற்கு முன் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கேற்ப விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய கட்டணமாக இருத்தல் வேண்டும்.

04. இத்துணைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் இதற்கு முன் இரத்துச் செய்யப்படாது விடின் அவ் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் மாத்திரம் செல்லுபடியாகும்.

05. ஏதேனுமொரு விளம்பர அறிவித்தலொன்றை காட்சிப்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்று அவசியமான ஒவ்வொரு நபரினால் குறைந்த பட்சம் அவ் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் திகதிக்கு வேலை செய்யும் 2 நாட்களுக்கு முன்பு இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றை சபைத் தலைவருக்கு முன்வைக்க வேண்டும்.

(அ) அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக் கொள்வதற்கு முன் வைக்கப்படும் அனைத்து விண்ணப்பப்படிவத்துடன் மில்லி மீற்றர் 210 x மில்லி மீற்றர் 297 அளவுடைய காகிதத்தில் 1 : 1000 அளவிற்கேற்ப தயாரிக்கப்பட்ட மீற்றர் 297 அளவுடைய காகிதத்தில் 1 : 1000 அளவுடன் வரையப்பட்ட நில திட்டமொன்று/திட்டங்கள் முன் வைக்க வேண்டுமென்பதுடன், விளம்பர அறிவித்தல்களின் குறித்த நீள மற்றும் அகலத்தை அதில் குறிப்பிடப்படல் வேண்டும்.

06. முன் வைக்கப்பட்டுள்ள எந்தவொரு விண்ணப்பப்படிவமொன்றுக்காக இப் பிரிவின் துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட அவசியமான விதிமுறைகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் அது பற்றி சபைத் தலைவருக்கோ அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் விண்ணப்பதாரிக்கு அறிவிக்க வேண்டும். விண்ணப்பதாரிக்கு அவ் அறிவித்தல் கிடைக்கப் பெற்றவுடன் அவரினால் 3(3) ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேற்ப அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் 16 (அ) வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணையப் பணத்தொகையை பிரதேச சபைக்கு செலுத்தியதன் பின் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்கலானது சபைத் தலைவரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் கடமையாகும்.

(அ) இச் துணைச் சட்டத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும் ஒரு மத நடவடிக்கையொன்றுக்காக அல்லது நிதி அறவிடப்படாது நடாத்தப்படும் எந்தவொரு கலாச்சார நடவடிக்கை தொடர்பான விளம்பர அறிவித்தலொன்றுக்கு அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.

07. காட்சிப்படுத்தும் ஒவ்வொரு அறிவித்தலுக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தின் இலக்கமானது அவ் அறிவித்தல் அல்லது அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு முன் ஒவ்வொரு அறிவித்தலின் வலது புறம் கீழ் ஓரத்தில் குறிப்பிடுதல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

08. இத் துணைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு முன் வைக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விளம்பரம் காட்சிப்படுத்தும் இறுதித் திகதியின் பின் இருபத்து நான்கு மணித்தியாலங்கள் கடப்பதற்கு முன்பாக அவ் விளம்பர அறிவித்தல் அல்லது அதற்கு பயன்படுத்திய வேறு அனைத்து பொருட்களின் பகுதிகள் அவ் இடத்திலிருந்து அல்லது இடங்களிலிருந்து அகற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் அனுமதிப்பத்திரதாரரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

09. எந்தவொரு வியாபார இடத்தின் பெயர், இலக்கம் மற்றும் / அல்லது முகவரியுடன் வேறு எந்தவொரு விற்பனை பொருட்கள் அல்லது சேவையொன்றின் விளம்பர அறிவித்தலொன்று காட்சிப்படுத்துவதற்கு கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்தில் அல்லது எந்தவொரு வீடொன்றில் ஏதேனுமொரு முறையில் விற்பனை பொருட்கள் அல்லது சேவை பற்றிய விளம்பர அறிவித்தலொன்று காட்சிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அவ் விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பர அறிவித்தல்கள் இத் துணைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். இத் துணை சட்டத்தின் விதிமுறைகள் தொடர்பாக அனுமதி பொற்றுக் கொள்ள வேண்டிய நபராக அவ் வியாபார இடத்தின் அல்லது வீட்டு உரிமையாளர், முகாமையாளர் அல்லது அச் சந்தர்ப்பத்தில் அங்கு பொறுப்பாக இருக்கும் எவரேனுமொரு நபரென்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

10. (அ) சபைத் தலைவரினால் உரிய செயற்பாடுகளுக்காக இங்கு இரண்டாவது உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப கணிசமாக தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று இருந்தாலன்றி அப்படியானால் எவரேனுமொரு நபரினால் பிரதேச சபையின் பிரதேசத்தினுள் பொது இடங்களிலிருந்து பார்க்கும் போது தெரியுமாறு ஏதேனுமொரு முறையில் விளம்பர அறிவித்தலொன்று காட்சிப்படுத்துவதற்கும் அல்லது காட்சிப்படுத்துவதற்கு திட்டமிடவும் செய்தல் கூடாது.

(ஆ) காட்சிப்படுத்துவதற்காக செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின் மாத்திரமே ஏதேனுமொரு விளம்பர அறிவித்தலொன்று, பொது இடங்களிலிருந்து பார்க்கும்போது தெரியும் வகையில் குறித்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட குறித்த இடத்தில் அல்லது இடங்களை தவிர வேறு எந்தவொரு இடத்திலோ காட்சிப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு திட்டமிடல் செய்யவோ கூடாது.

11. இத் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் போன்றே விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப் பட்டிருந்தாலன்றி சபைத் தலைவரினால் ஏதேனுமொரு முறையில் விளம்பர அறிவித்தலொன்று காட்சிப்படுத்துவதற்காக அனுமதி பத்திரமொன்று வழங்கப்படக் கூடாது.

(அ) இத்துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேற்ப பிரதேச சபையினால் முன்னர் தீர்மானிக்கப்பட்ட வலயத்திற்குரிய இடத்தில் காட்சிப்படுத்துவகற்கான வேண்டுகோளாக இருத்தல் வேண்டும்.

(ஆ) அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்கு வேண்டுகோள் விடுக்கும் இடத்திற்காக வேறு நபருக்கு முன்பதாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் கால எல்லை முடிவடைந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் முன்னர் வழங்கப்பட்ட அல்லது மேலும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்றின் கீழ் காட்சிப்படுத்தப்படும் எந்தவொரு அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர காட்சிகளுக்கு தடையாக இல்லாதவாறு அதற்கு அருகில்

அறிவித்தல் பலகையை காட்சிப்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு இவ் விதிகள் தடையாக இருக்கக் கூடாது.

(இ) கண்காட்சிக்கான அனுமதிப்பத்திரம் வேண்டுகோள் விடுக்கும் விளம்பரம் தவறானவை அல்லது வெறுக்கத்தக்க அல்லது நெறிமுறையற்ற அல்லது ஏதேனும் கலாச்சாரத்தை சீர்குலைக்கும் அல்லது ஏதேனுமொரு மதத்தினை அல்லது இனத்தவரை அல்லது சமூகங்களுக்கு பாதிப்பு அல்லது அவ்வாறான நிலைமையினை ஏற்படுத்த இடமளிக்கும் வகையிலான காட்சிகள் அல்லது சொற்கள் உள்ளடக்கும் வகையிலான அறிவித்தலொன்றாக இருத்தல் கூடாது.

(ஈ) இத் துணைச் சட்டத்தின் கீழ் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள ஒரு காட்சி இணைப்பொன்றில் காட்சிப்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரமொன்றின் மூலம் வேண்டுகோள் விடுக்கும் போது அக் காட்சி இணைப்பில் அவ் விளம்பர அறவித்தலை காட்சிப்படுத்துவதற்காக போதியளவு இடம் இருக்க வேண்டுமே தவிர, அச் சந்தர்ப்பத்திலும் முன்பதாக வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்றின் கீழ் சாட்சிப்படுத்தப்படுமாயின் அவ் விளம்பர அறவித்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம் முடிவடைந்திருத்தல் வேண்டும்.

(உ) ஏதேனும் எழுத்துமூலமோ சட்டத்தின் மூலமோ தடை செய்யப்பட்டு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வகையான விளம்பர அறவித்தலொன்றை சாட்சிப்படுத்தல் கூடாது.

12. விளம்பர அறிவித்தலின் அருகாமையில் பயணிக்கும் எந்தவொரு நபருக்கோ அல்லது வாகனத்திற்கோ அல்லது இடைஞ்சலாக விபத்து ஏற்படும் வகையில் எந்தவொரு நபரினாலும் எந்தவொரு விளம்பர அறிவித்தலொன்றும் பொருத்துதல் கூடாது. அவ்வாறாயின் வாகனங்கள் ஓட்டிச் செல்லும் போது எவரேனும் சாரதி ஒருவரின் கவனத்தை மாற்றக் கூடிய வகையில்அல்லது அவரது பார்வைக்கு தடையாகும் வகையில் மின்சார ஒளி விளக்குகள் பொருத்துதல் அல்லது எதிரொளித்தல் செய்யவில்லை என்பதற்காக போக்குவரத்து ஆலோசனை கமிட்டியின் சிபாரிசினை பெற்றுக் கொண்டிருந்தாலன்றி காட்சிப்படுத்தப்படுத்தல் கூடாது.

13. காட்சிப்படுத்துலுக்காக செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொண்டு சாட்சிப்படுத்தும் ஏதேனும் அறிவித்தலொன்றுக்கு ஏற்படும் எந்தவொரு சேதம் அல்லது சிதைவு மற்றும் அகற்றப்பட்டமை தொடர்பாக பிரதேச சபை எந்த வகையிலும் பொறுப்பேற்கக்கூடாது.

14. எந்தவொரு வகையிலும் விளம்பர அறிவித்தலொன்று பொது இடத்தில் இருக்கும் அல்லது அருகிலுள்ள மரத்தில், மரத்தின் தண்டில், கிளையில் அல்லது வேறு எந்தவொரு பகுதிக்கோ அல்லது எந்தவொரு பொது கட்டிடத்திற்கோ தொடர்புபடுத்தி பொருத்துதல், ஒட்டுதல், தொங்கவிடுதல், கட்டி வைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் யாரும் செய்யக் கூடாது.

15. (அ) இத்துணைச் சட்டத்தின் கீழ் பிரதேச சபையினால் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி எந்தவொரு பிரதேசத்தின் பிரதேச சபைக்குரிய ஏதேனுமொரு காணியில் அல்லது பிரதேச சபையுடன் செய்யப்படும் ஒப்பந்தத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்ளும் வேறு எவரேனும் நபருக்குரிய காணியொன்றில் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்தப்படக்கூடிய காட்சி இணைப்பு அமைத்து நடாத்திச் செல்வதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட எந்தவொரு காட்சி இணைப்பில் விளம்பர அறிவித்தலொன்று காட்சிப்படுத்தலுக்காக பிரதேச சபையினால் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி கட்டணமொன்று விளம்பரதாரர்களிடம் அறவிடுவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(இ) (ஆ) பந்தியின் விதிமுறைகளின் கீழ் பிரதேச சபையினால் கட்டளையிடப்படும் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரித்தல் சபைத் தலைவலரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

16. (அ) விளம்பர அறிவித்தலொன்று காட்சிப்படுத்துவதற்காக முன் வைக்கப்படும் எந்தவொரு விண்ணப்ப பத்திரமொன்றுக்கு பதிலாக அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், பிரதேச சபையினால் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படியான பிணைப் பணமொன்று விண்ணப்பதாரரினால் பிரதேச சபைக்கு வைப்புச் செய்யும் வரை சபைத் தலைவரினால் அவ் விண்ணப்ப படிவத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படக் கூடாது.

(அ) எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் காட்சிப் படுத்துவதற்காக அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதற்கு முன் பிரதேச சபைக்கு வைப்புச் செய்ய வேண்டிய பிணையப் பணப் பெறுமதி பற்றி பிரதேச சபையினால் எடுக்கப்படும் தீர்மானம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்தல் சபைத் தலைவரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

17. (அ) இத் துணைச்சட்டத்தின் 08 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுத்தப்பட்டதன் பிறகு சபைத் தலைவருக்கு எழுத்து மூலம் கோரப்படும் வேண்டுகோளின் பிரகாரம் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன் பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகை மீளப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதிப்பத்திரதாரருக்கு முடியும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எழுத்து மூல வேண்டுகோளொன்று கிடைத்தவுடன், அவ் வைப்புத் தொகையை அனுமதி பத்திரதாரருக்கு விடுவிப்பதற்கு முன்,

(i) இத் துணைச்சட்டத்தின் 09 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை அனுமதிப்பத்திரதாரர் உரிய முறையில் கடைப்பிடித்துள்ளாரா எனவும்,

(ii) அறிவித்தலானது பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட காட்சி இணைப்பொன்றில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும் அவ் அறிவித்தலை அகற்றும்போதும் அல்லது அனுமதிப்பத்திரதாரரின் பொறுப்புடனான எந்தவொரு செயலின் காரணமாகவோ அக் காட்சி இணைப்பிற்கு எந்தவொரு பாதிப்புகளும் ஏற்படவில்லையெனவும்,

உறுதிப்படுத்திக் கொள்ளல் பிரதேச சபை செயலாளரின் கடமையாகும்.

(இ) அனுமதிப்பத்திரதாரரினால் 08 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுத்தப்பட்டுள்ளதெனவும் மற்றும் பிரதேச சபையின் காட்சி இணைப்பிற்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லையெவும், (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உறுதிப்படுத்திக் கொள்ளும்போது சபைத் தலைவர் திருப்தியடையவில்லையெனில் அவ் வைப்புத் தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு முழுமையாக விடுவிக்க கூடாது. எந்தவொரு அனுமதிப் பத்திரதாரரினால் 08 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுத்த தவறிய சந்தர்ப்பத்தில் அல்லது பிரதேச சபையின் காட்சி இணைப்பிற்கு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அக் காரியங்களை செய்வதற்கும் அல்லது காட்சி இணைப்பினை புதுப்பிப்பதற்கு அல்லது இரு காரியங்களுக்காகவும் பிரதேச சபை செலவிட வேண்டிய தொகையை வைப்புத் தொகையிலிருந்து குறைக்க வேண்டுமென்பதுடன், ஏதேனுமோரு தொகை எஞ்சுமாயின் அத்தொகையை மாத்திரம் அனுமதிப் பத்திரதாரருக்கு மீள் செலுத்த முடியும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுத்தும் போது சபைக்கு அறவிட வேண்டிய தொகை வைப்புச் செய்யும் பிணையப் பணத்தை விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு மேலும் அறவிட வேண்டிய தொகையினை அனுமதிப்பத்திரதாரர் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும்.

18. பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் நடாத்திச் செல்லும் எந்தவொரு இடத்திற்கு அல்லது கைத்தொழிற்சாலையின் பெயர், முகவரி மற்றும் அவ்வியாபார தலத்தில் மேற்கொள்ளும் வியாபாரத்தின் தன்மை அல்லது கைத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மை என்பவற்றை காட்டும் 25 சதுர அடிக்கு மேற்படாத அறிவித்தல் பலகையொன்று மாத்திரம் அவ் வியாபார தலத்தில் அல்லது கைத்தொழிற்சாலையின் முன் பக்கம் காட்சிப்படுத்தல். குடும்ப பெயர்ப்பலகை மற்றும் எந்தவொரு சொத்தும் வாடகைக்கு விடுவதற்கு அல்லது விற்பதற்கு அல்லது கூலிக்கு விடுவதற்கு அல்லது அச் சொத்தின் மீது காட்சிப்படுத்தப்படும் “வாடகைக்கு விடுவதற்கு உள்ளது” அல்லது விற்பனைக்கு உள்ளது “அல்லது” கூலிக்கு விடவுள்ளது ” எனக் குறிப்பிடும் விளம்பர அறிவித்தல் ஒன்றுக்காக மாத்திரம் இத்துணைச் சட்டத்தின் விதிமுறைகள் பொருந்தாது. எவ்வாறாயினும் அவ்வகையான அறிவித்தல் ஒன்றுக்கு மேல் காட்சிப்படுத்தப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறு மேற்படும் ஒவ்வொரு அறிவித்தல் பலகைக்கும் இத் துணைச் சட்டத்தின் விதிமுறைகள் செல்வாக்கு செலுத்துதல் அவசியமாகும் .

19. அரசாங்கம் அல்லது அரச நிறுவனமொன்று அல்லது மாகாண சபை அல்லது பிரதேச சபையினால் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தலொன்று தொடர்பாக இப் பகுதியில் துணைச் சட்டத்தின் விதிமுறைகள் பொருந்தாது.

20. விளம்பர அறிவித்தல் சாட்சிப்படுத்தப்படும் இடம்

(1) பிரதேச சபையினால் இத் துணைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் காட்சி இணைப்பொன்றாகும் போது அக் காட்சி இணைப்பில் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக இத் துணைச் சட்டத்தின் 15 (ஆ) பந்தியின் கீழ் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்றை பிரதேச சபைக்கு செலுத்தியிருக்க வேண்டும்.

(2) விண்ணப்பதாரர் அல்லாத வேறு எந்தவொரு நபருக்கோ அல்லது எந்தவொரு அதிகார சபைக்குரிய இடமாகும் பட்சத்தில் அந் நபருக்கோ அல்லது அதிகார சபைக்கோ அவ் விளம்பர அறிவித்தல் அவ்விடத்தில் காட்சிப்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தும் எழுத்து மூல சாட்சிகளை முன் வைக்க வேண்டும்.

21. இத் துணைச் சட்டத்தை சார்ந்த செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வையிடல் அல்லது கட்டுப்படுத்தல் தொடர்பாக பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் அச் சபைத் தலைவருக்கோ அல்லது செயலாளரினால் சபையின் எவரேனுமோரு உத்தியோகத்தருக்கு ஒப்படைத்தல் சட்டபூர்வமாகும்.

22. (அ) இத்துணைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் எந்தவொரு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படாவிட்டால், அவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது எவ்வருடத்திற்கோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அல்லது அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின் முடிக்கப்படல் வேண்டும்.

(ஆ) எந்தவொரு விளம்பர அறிவித்தலொன்று காட்சிப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரக் காலம் முடிவடைந்த பின்னர் தொடர்ச்சியான வருடத்திற்குள் அவ் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அடுத்த வருடத்தில் அவ் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக புதிய அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் விளம்பர அறிவித்தல் காட்சிப் படுத்துவதற்கு வழ்ங்கப்படும் அனுமதி பத்திரத்திற்கு தகுதி ஆண்டிற்குள் அறவிடுவதற்கு பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் என்னவாக இருப்பினும் அவ் விளம்பர அறிவித்தல் காட்சிப் படுத்துவதற்காக வழங்கப்படும் புதிய அனுமதிப்பத்திரத்திற்காக முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணமாகவிருத்தல் வேண்டும்.

23. (அ) எந்தவொரு விளம்பர அறிவித்தலொன்றுக்கான பயன்படுத்தப்படும் எவ்வகையான காட்சி இணைப்பொன்று, ஆதாரமொன்று, அமைப்பொன்று அல்லது பொருத்துதல் ஒன்று சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அல்லது எந்தவொரு நபருக்கோ அல்லது எந்தவொரு நபரின் சொத்துகளுக்கு அபாயகரமாகவோ அல்லது பாதிப்பு ஏற்படும் வகையில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அதனை குறித்த காலத்திற்குள் உண்மை நிலைக்கு கொண்டு வருமாறு அனுமதிப்பத்திரதாரருக்கு அறிவித்தலொன்றின் மூலம் கட்டளையிடுவதற்கு சபைத் தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழான அறிவித்தலொன்று கிடைக்கப் பெற்ற எந்தவொரு நபரும் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்னைகளுக்கு ஏற்ப செயற்பட தவறும் சந்தர்ப்பத்தில் சபைத் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் அவ் விளம்பர அறிவித்தலுக்காக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் மற்றும் அவ் விளம்பர அறிவித்தலை கழற்றி அகற்றலானது சட்டபூர்வமாகும்.

(இ) மேல் (ஆ) பந்தியின் விதிமுறைகளின் கீழ் எந்தவொரு அனுமதிப்பத்திரமொன்றும் இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ் விளம்பர அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக வைப்புச் செய்த பிணையத் தொகை பிரதேச சபைக்கு உரித்தாகுமே தவிர அப் பிணையப் பணத்தை மீளப் பெற வேண்டுகோள் விடுக்க வேறு எந்தவொரு நபருக்கும் உரிமை கிடையாது.

24. ஏந்தவொரு விளம்பர அறிவித்தல் நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்படும் எந்தவொரு நிர்மாண ஆதாரமொன்று, பொருத்துதல் ஒன்றோ அல்லது அதற்காக பயன்படுத்தும் வேறு எதனாலும் அவ் விளம்பர அறிவித்தலில் வெளியிடும் கருத்து அல்லது பொருத்தமற்ற கருத்துக்களினால் எந்தவொரு தரப்பினருக்கு ஏற்படும் அல்லது ஏற்பட வாய்ப்புள்ள எந்தவொரு நஷ்டமோ அல்லது பாதிப்பு தொடர்பாக அனுமதிப் பத்திரதாரர் பொறுப்பு கூறுதல் அவசியமாகும்.

25. எந்தவொரு விளம்பர அறிவித்தலும் காட்சிப்படுத்துவதற்காக இத் துணைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் மூலம் விளம்பர அறிவித்தலில் குறிப்பிடும் கருத்து அல்லது வெளியீடு முன் வைப்பதற்கு பெற்றுக் கொடுக்கப்படும் சட்டபூர்வமான அனுமதிப்பத்திரமென கருதக் கூடாது என்பதுடன், அவ்வாறு விளங்கிக் கொள்ளவும் கூடாது.

26. (அ) எந்தவொரு முறைப்பாடும் எழுத்து மூலமோ அல்லது வாய் மூலமோ பிரதேச சபையின் தலைவர், செயலாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு முன் வைக்க முடியும் என்பதுடன், அவ் உத்தியோகத்தரினால் முறையான பரிசீலனை மேற் கொண்டு தீர்வு பெற்றுக் கொடுத்தல் சட்டபூர்வமாகும்.

(ஆ) 26 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த அதிகாரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு உடன்படாதவராயின் அத் தீர்மானம் கிடைத்து 30 நாட்களுக்குள் சப்பிரகமுவ மாகாண சபையில் உள்ளூராட்சி நிர்வாகத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கோ அல்லது மாகாண சபை கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆளுநருக்கும் மேன்முறையீட்டை முன் வைத்து தீர்வுகளை வழங்குதல் சட்டபூர்வமாகும்.

27. இத் துணைச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்ட விதிமுறை ஒன்றோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுதல் குற்றமாகும்.

28. இத் துணைச் சட்டத்தில் எந்நவொரு நிபந்தனையையும் மீறிய சந்தர்ப்பத்தில் அம் மீறல் பற்றிய கவனம் செலுத்தும் அறிவிப்பு ஒன்றுடன் வழங்கப்பட்ட எந்தவொரு அனுமதிப்பத்திரத்தையும் இரத்துச் செய்வதற்கு தலைவருக்கோ அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கோ அதிகாரம் இருக்க வேண்டும்.

29. இத் துணைச் சட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் அனுமதிபத்திரமின்றி வளாகமொன்றை நடாத்திச் செல்வதற்காக அல்லது துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு நிபந்தனையையும் மீறுதல் குற்றமாகும் என்பதுடன்.அக் குற்றம் தொடர்பாக உரிய நீதிமன்றத்தினால் குற்றமொன்றுக்கு குற்றவாளியென நிரூபிக்கப்பட்ட பின் அக் குற்றம் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபை சட்டத்தின் 122 (2) உப வாசகத்தின் கீழான அபராதம் செலுத்த உட்பட்டிருக்க வேண்டும். அங்கு குற்றம் தொடர்பாக உரிய அதிகாரத்துடனான நீதிமன்றத்தில் குற்றமொன்றிற்கு குற்றவாளியென நிரூபிக்கப்பட்டு அபராதம் செலுத்த உட்பட்டிருக்கும் நபரினால் அதனை செய்ய தவறுதல் அல்லது மீறுதல் மேலும் தொடர்ச்சியாக செய்து கொண்டு போகும்போது அம் மீறல் பற்றி கவனத்தை செலுத்தி சபைத் தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் எழுத்து மூல அறிவித்தலென்றை கொடுத்தும் அதன் பின்னரும் மீறல் தொடர்ச்சியாக செய்து கொண்டு போகும் ஒவ்வொரு தினத்திற்கும் மேற் குறிப்பிடப்பட்ட வாசகத்தின் கீழ் மேலதிக அபராதம் செலுத்த உட்பட வேணடும்.

30. சொல் தொடர்பாக குறிப்பாகச் சுட்டப்பெற்ற பொருள் தேவைப்படுமென்றால் , இத்துணைச் சட்டத்தில்

"சபைத் தலைவர்" என்பது, இம்புல்பே பிரதேச செயலகத்தில் தற்காலத்தில் தலைவர் பதவியை வகிப்பவராகும்.

"பிரதேச சபை" என்பது, இம்புல்பே பிரதேச சபையாகும்.

" செயலாளர் " என்பது தற்காலத்தில் இம்புல்பே சபையில் தற்காலத்தில் செயளாளர் பதவியை வகிப்பவராகும்.

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் " அப் பணிக்காக சபைத் தலைவரினால் எழுத்துமூலம் அதிகாரம் பெற்ற சபையில் எந்தவொரு உத்தியோகத்தர் என்பதாகும்

"போக்குவரத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி" என்பது, அப் பணிக்காக தலைமை பொலிஸ் அதிகாரியினால் எழுத்துமூலம் அதிகாரம் பெற்ற பின்னவல பொலிஸ் நிலையத்தின் எந்தவொரு உத்தியோகத்தராகும்.

" கண் காட்சி " எனபது, பலகையினால் அல்லது வேறு எந்தவொரு பொருட்களையும் பயன்படுத்தி அமைக்கப்படும் எந்தவொரு சட்டகத்தில் அல்லது பொருத்தப்பட்ட விளம்பர அறிவித்தல் ஒன்றாகும்.

" காட்சி இணைப்பு " என்பது, மக்கள் அறிந்து கொள்ளுமுகமாகவோ அவர்களின் கவனத்திற்காகவோ காட்சிப் படுத்தப்படும் எந்தவொரு விளம்பர அறிவித்தலொன்றை பொருத்துவதற்காக அல்லது நிறுத்தி வைப்பதற்காக அமைக்கப்படும் எந்தவொரு வகையிலான நிரந்தர அறிவித்தல் பலகையாகும்.

" விளம்பர அறிவித்தல் " என்பது, எவரேனுமொரு நபரினால் எந்தவொரு காணியிலோ அல்லது கட்டிடத்திலோ அல்லது உருவாக்கத்தின் மேலோ அல்லது அதன் மேலே முற்று முழுதாகவோ அல்லது அரைவாசிக்கோ காட்சிப்படுத்தப்படும் மற்றும் மக்கள் அறிந்து கொள்ளுமுகமாகவோ அல்லது அவர்களின் கவனத்தின் பொருட்டு காட்சிப்படுத்தப்படும் , ஒட்டப்படும் , பொருத்தப்படும் , அமைக்கப்படும் , தொங்கவிடப்படும் அல்லது வேறு வகையில் நிலைப்படுத்தப்படும் விளம்பரப் பணிக்காக பயன்படுத்தப்படும் எந்தவொரு எழுத்துக்கள் அல்லது உருவப் படங்கள் உள்ளடக்கப்பட்ட விளம்பர அறிவித்தலொன்று அல்லது கொடி அல்லது பதாகை காட்சி அல்லது அறிவித்தலொன்று அல்லது அறிவிப்பொன்று அல்லது வியாபார அறிவித்தலொன்று எனப் பொருள்படும்.

31. இத் துணைவிதியின் சிங்கள மற்றும் தமிழ் ஆகிய உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி செயற்படல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

இம்புல்பே பிரதேச சபை

அறிவித்தலொன்றை காட்சிப்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பபடிவம்

இம்புல்பே பிரதேச சபைத் தலைவருக்கு

1. விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

3. தொலைபேசி இலக்கம் : ..........................................................................

4. விண்ணப்பதாரி வரவில்லையென்றால்,
முகவரின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................
தொலைபேசி இலக்கம் : ..........................................................................

5. அறிவித்தல் பற்றிய விபரங்கள் : ..........................................................................

காட்சிப்படுத்தும் அறிவித்தலின் நீளம் X அகலம் காட்சிப்படுத்தும் அறிவித்தலின் பரப்பளவு

| | இடம் | அடி ) அளவு | பக்கங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை (மொத்தம்) |
|---|---|---|---|---|
| i. | ............................................... | ............................ | ............................ | ............................ |
| ii. | ............................................... | ............................ | ............................ | ............................ |
| iii. | ............................................... | ............................ | ............................ | ............................ |

6. காட்சிப்படுத்த இருக்கும் அறிவித்தல் பற்றிய விபரம் :

..........................................................................................................................................
..........................................................................................................................................

(அறிவித்தலின் பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.)

7. அறிவித்தல் காட்சிப்படுத்தும் காலம் ................................ இலிருந்து .............................. வரை

இம்புல்பே பிரதேச சபையின் துணைச் சட்டத்திற்கு உடன்பட்டு காட்சிப் படுத்துவதற்கும், குறித்த திகதியில் அறிவித்தலை அகற்றுவதற்கும் இது தொடர்பாக பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள முடிவுகள் மற்றும் ஆலோசனையினை கடைபிடிப்பதற்கும் நான் இத்தால் வாக்குறுதியளிக்கின்றேன். அவ் விதிமுறைகளை மீறினால் பிணைய பணம் பிரதேச சபைக்கு உரித்தாகும் என்பதையும் நான் அறிவேன்.

மேலும், இங்கு குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவையெனவும், உண்மையானவையெனவும் ஏதேனுமொரு வகையில் இங்கு குறிப்பிடப்படும் தகவல்கள் பொய்யானவையென தெரியவந்தால் என்னால் முன் வைக்கப்பட்ட அனைத்து பதாகைகளையும் பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கும், காட்சிப்படுத்தலின் பின் தெரியவந்தால், அனைத்தையும் வெட்டி ஒதுக்கி சபைக்கு உரித்தாக்குவதற்கு கீழ்ப்படியவும் உடன்படுகின்றேன்.

திகதி : .......................................

............................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

## இரண்டாவது அட்டவணை

*இத் துணைச் சட்டத்தில் 3 (3) வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அறவிடும் விதம் கீழ் காணுமாறு அமையும்*

| | | ரூ. சதம் |
|---|---|---|
| 01. | மின் குமிழ், வேறு மின் உபகரணங்களை பயன்படுத்தி அமைக்கப்படும் விசேட அறிவித்தல் பலகையொன்றின் சதுர அடி ஒன்றுக்காக வருடமொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் | 25.00 |
| 02. | நிரந்தர அறிவித்தல் பலகையொன்றின் சதுர அடி ஒன்றுக்காக வருடமொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் | 25.00 |
| 03. | காணி ஏலமிடல் தொடர்பாக நிரந்தர அறிவித்தல் பலகையொன்றின் சதுர அடி ஒன்றுக்காக வருடமொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் | 25.00 |
| 04. | காணியை ஏலமிடுவதற்காக விளம்பர துணி பதாகைகளுக்காக சதுர அடி ஒன்றுக்காக வருடமொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் | 10.00 |
| 05. | வேறு சாதாரண அறிவித்தல்களுக்கு சதுர அடி ஒன்றுக்காக வருடமொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் | 10.00 |
| 06. | எந்தவொரு மதிற் சுவரில் காட்சிப் படுத்தப்படும் அறிவித்தல் பலகையொன்றின் சதுர அடி ஒன்றுக்காக வருடமொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் | 25.00 |
| 07. | பலகை சட்டகங்களில் பொருத்தப்பட்டு விளம்பரப்படுத்தப்படும் சதுர அடி 06 இற்கு மேற்படாத அறிவித்தல் பலகையொன்றின் சதுர அடி ஒன்றுக்காக வருடமொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் | 10.00 |
| 08. | எந்தவொரு வீதிக்கோ அல்லது பாதைக்கோ எதிரில் அமைந்துள்ள கட்டிடத்தின் முகப்பில் அல்லது வியாபாரச் சாலையின் பெயர்ப்பலகை அல்லது கட்டிடத்தின் முகப்பில் (வியாபார சாலையின் பெயரினை காட்சிப் படுத்துவதற்காக 25 சதுர அடிக்கு கட்டணம் அறவிடுவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.) வரையறை கடந்து செல்லும் நீளமான அறிவித்தலொன்று பொருத்துவதற்கும் அல்லது தொங்கவிடுவதற்கும் சதுர அடி ஒன்றுக்காக வருடமொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம் | 25.00 |

07-121

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.